**இலங்கை அச்சீட்டு நிறுவகம்**

---------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

------------------------

**1.1 அபிப்பிராயம்**

-------------------

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் நான் பெற்றுக் கொண்ட தகவல்களுக்கும் மற்றும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, இலங்கை அச்சீட்டு நிறுவகத்தின் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கணக்குப் பதிவேடுகள் முறையாகப் பேணப்பட்டிருந்தன எனவும், இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களால் நிதிக் கூற்றுக்களில் விளையும் தாக்கத்தைத் தவிர இலங்கை அச்சீட்டு நிறுவகத்தின் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாடுகளின் நிதிசார் விளைவுகளையும் காசுப்பாய்ச்சலையும் உண்மையாகவும் நேர்மையாகவும் காட்டும் வண்ணம் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கமைய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

**1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்**

-------------------------------------------------------------

**1.2.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிப்பதிலான தாமதம்**

-------------------------------------------------------------

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் நிதி ஆண்டு முடிவுற்று 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் நிறுவகத்தின் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2011 மே 30 ஆம் திகதியே கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

**1.2.2 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

----------------------------------------------------------------------

(அ) இலங்கை கணக்கீட்டு நியம இல. 18 (77) இன் பிரகாரம், ஏதேனும் சொத்து வகைகள் மீள்பெறுமதியிடப்பட்ட பெறுமதியில் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படும் போது வெளிக்காட்டப்பட வேண்டிய

விடயங்கள் தலைமைக்காரியாலயத்தினதும் பேருவளைக் கிளையினதும் இயந்திரங்களை ரூபா 6,535,149 தொகைக்கு மீள்பெறுமதியிடப்படுவது தொடர்பாக வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை.

### 1.2.3 கணக்காய்விற்காக சான்றுகள் இன்மை

நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படும் பின்வரும் விடயங்கள் குறித்த அவ் விடயங்களுக்கு முன்பாகக் காண்பிக்கப்பட்டுள்ள சான்றாதாரங்கள் இன்மையால் கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்தவோ அல்லது ஏற்றுக்கொள்ளப்படவோ முடியாதிருந்தது.

| **விடயம்** | **பெறுமதி** | **சமர்ப்பிக்கப்பட்டிராத சான்றுகள்** |
|---|---|---|
| | **ரூபா** | |
| நிலையான சொத்துக்கள் | 1,468,770 | ஆண்டின் போதான கொள்வனவுகள் தொடர்பான விபரம் |
| பணிக்கொடை | 744,163 | பட்டோலைகள் |
| செலுத்தப்பட வேண்டிய செலவினங்கள் | 778,821 | உரிய ஆவணங்கள் மற்றும் கொடுப்பனவு உறுதிச் சான்றுகள் |
| 1150 நாட்குறிப்புகள் | - | பட்டோலைகள் |

### 1.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுக்கான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 8(3) ஆம் பிரிவு மற்றும் 2003 யூன் 2 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2.1 ஆம் பிரிவு | 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் பாதீட்டில் எதிர்வுகூறப்பட்ட ஐந்தொகை ஒன்றும் காசுப்பாய்ச்சற் கூற்று ஒன்றும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2.5 ஆம் பிரிவு | பணிப்பாளர் சபை அங்கீகரித்த பாதீட்டின் பிரதி உரிய அமைச்சிற்கு, பொது முயற்திகள் திணைக்களத்திற்கு, நிதி அமைச்சிற்கு மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு உரிய ஆண்டு ஆரம்பிப்பதற்கு 15 நாட்களுக்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் இதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

### 1.2.5 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

நிர்வாக சபையின் அங்கீகாரம் இன்றி ரூபா 10,000 தொகை அன்பளிப்புச் செய்யப்பட்டிருந்தது.

## 2 நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் மீளாய்வு

### 2.1.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி, 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான செயற்பாடுகள் ரூபா 4,412,259 மிகையை விளைவித்ததுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 3,337,971 ஆக இருந்ததனால் மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூபா 1,074,288 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது.

| விபரம் | முரண்கள் | | |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| வருமானம் | 660,531 | - | |
| ஏனைய செயற்பாட்டு வருமானம் | - | 1,336,195 | |
| கிளைகளின் தேறிய மிகை/ பற்றாக்குறை | - | 21,531 | |
| நிர்வாகச் செலவினம் | 1,845,361 | - | |
| நிதி மற்றும் ஏனைய செலவினம் | - | 73,878 | |
| | 2,505,892 | 1,431,604 | 1,074,288 |

### 2.1.2 கிளைகளில் இருந்து ஒட்டுமொத்த இலாபத்திற்கான பங்களிப்பு குறைவடைதல்

பிரதான காரியாலயத்தில் 2010 ஆம் ஆண்டிற்கான இலாபம் ரூபா 4,412,259 ஆக இருக்கையில் மாத்தளை கிளையின் இலாபம் ரூபா 50,911 ஆகவும் பேருவளை கிளையின் நட்டம் ரூபா 96,618 தொகையாகவும் காணப்பட்டது. இலங்கை அச்சீட்டு நிறுவகத்தினால் பேணப்பட்டுவரும் இவ்விரு கிளைகளிலிருந்து நிறுவகத்தின் ஒட்டுமொத்த இலாபத்திற்கான பங்களிப்பு மிகவும் குறைவான மட்டத்தில் நிலவியது.

## 2.2 செயற்பாட்டு மீளாய்வு

### 2.2.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2010 ஆம் ஆண்டிற்காக தலைமைக் காரியாலயத்திற்கு 22 பாடநெறிகளும் கிளைகளுக்கு 3 பாடநெறிகளும் திட்டமிடப்பட்டிருந்ததுடன் திட்டமிடப்பட்ட 08 பாடநெறிகள் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2010 ஆம் ஆண்டின் போது நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த 6 பாடநெறிகளுக்காக 85 மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் அப் பாடநெறிகள் நடாத்தப்பட்டிராமையால் எதிர்பார்க்கப்பட்ட வருமானத் தொகையான ரூபா 2,761,000 கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

(இ) பேருவளைக் கிளையில் 2010 ஆம் ஆண்டின் போது நடாத்தப்பட்ட பாடநெறிகளுக்காக எதிர்பார்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 60 ஆனதுடன் உள்ளபடியாகக் கலந்து கொண்ட மாணவர்களின் எண்ணிக்கை 33 ஆகும். இது எதிர்பார்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கையின் 55% ஆகும். இதன் பிரகாரம் 2009 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக மாணவர்களின் எண்ணிக்கையில் குறைவு 208% அளவில் காணப்பட்டது.

### 2.2.2 தாமதமான செயற்திட்டங்கள்

இலங்கை அச்சீட்டு நிறுவகத்திற்கு புதிய கட்டிடம் ஒன்றை நிர்மாணிப்பதற்காக 2004 திசெம்பர் 09 ஆம் திகதி அமைச்சரவைக்கு அங்கீகாரம் கிடைக்கபெற்றிருந்த போதிலும் 5 ஆண்டுகள் கடந்திருந்த நிலையிலும் இந் நிர்மாணிப்பு நடவடிக்கைகளை ஆரம்பிக்க முடியாதிருந்ததுடன் உத்தேச காணியை கையேற்பதற்கான நடவடிக்கைகளும் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2011 யூலை 29 ஆம் திகதி வரை தயாரிக்கப்பட்டிராத கூட்டுத்திட்டத்தினை தயாரிப்பதற்காக 2010 ஆம் ஆண்டின் போதும் ரூபா 65,000 தொகையான கொடுப்பனவுகள் மேற்கொள்ள வேண்டியிருந்தது.

(ஆ) கணக்குத் தயாரிப்பு நடவடிக்கைகள் பட்டயக் கணக்காளர் நிறுவகம் ஒன்றிற்கு உடன்படிக்கை ஒன்று இல்லாது வழங்கப்பட்டிருந்ததுடன் இதற்காக ஓர் ஆண்டிற்கு ரூபா 102,747 தொகை செலுத்தப்பட்டிருந்தது. குறித்த திகதியில் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ரூபா 90,000 செலவில் தனியார் நிறுவகம் ஒன்றில் இருந்து பெறப்பட்டிருந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையின் பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 கூட்டுத்திட்டமும் அதன் செயற்பாடும்

2003 யூன் 2 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1 ஆம் பிரிவின் பிரகாரம், கூட்டுத்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 பாதீட்டுக் கட்டுப்பாடு

தலைமைக் காரியாலயம், மாத்தளை மற்றும் பேருவளை கிளைகளில் மீளாய்வாண்டு சம்பந்தமாக 10 விடயங்களின் கீழ் பாதீடு செய்யப்பட்ட ஏற்பாடுகளுக்கு மிகையாக ரூபா 485,898 தொகையான செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் 13 விடயங்களின் கீழ் ரூபா 603,102 தொகையும் ரூபா 22,723 தொகையும் பாதீடு செய்யப்பட்ட வருமானமாகக் காணப்பட்டன. கிளைக் காரியாலயங்களின் மதிப்பிடப்பட்ட பாடநெறி வருமானங்கள் ரூபா 558,250 ஆல் குறைவடைந்திருந்தது. இதன் பிரகாரம், பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான செலவினங்களுக்கிடையே கருத்திற்கொள்ளப்பட வேண்டிய முரண்கள் அவதானிக்கப்பட்டமையினால் பாதீடு ஆக்கபூர்வமான

முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகத் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) திட்டம் தயாரித்தல்.

(இ) பாடநெறிகள் நடாத்தல்.

(ஈ) ஏடுகள் பேணப்படுதல்